

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு 12.10.2024 அன்று திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூரில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தின் கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார். மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன். நகரப் பொறியாளர் சிவபாதம், மாநகராட்சி அலுவலர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### திருநெல்வேலி – காவல் கிணறு சந்திப்பில் முன்மொழியப்பட்ட

# அண்டர்பாஸுக்குப் பதிலாக சர்வீஸ் சாலையுடன் கூடிய ரவுண்டானா அமைத்திடுக!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு – ஒன்றிய சாலை போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு கடிதம்!

நெல்லைசு, அக். 14 -

திருநெல்வேலி மாவட்டம், காவல் கிணறு சந்திப்புக்கு அருகில் என்.எச். 44 மற்றும் என்.எச். 944 சந்திப்பில் முன்மொழியப்பட்ட அண்டர் பாஸுக்குப் பதிலாக அதே இடத்தில் சர்வீஸ் சாலையுடன் கூடிய ரவுண்டானா அமைக்கப்பட வேண்டும் என்று தமிழ் நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், ஒன்றிய சாலை போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து ஒன்றிய அமைச்சருக்கு மு.அப்பாவு எழுதிய கடிதம் வருமாறு:

NH44 (பழைய எண் NH 7) மற்றும் NH 944 (பழைய எண் NH 47 B) சந்திப்பில், அதாவது NH44 திருநெல்வேலி - கன்னியாகுமரி நான்குவழிசாலை Km 220/000 இல் காவல்கிணறு சந்திப்புக்கு அருகில் கருதப்பெறும் அடிநிலவழி (Underpass) கட்டுமானம் குறித்து தங்களின் அன்பான கவனத்திற்குகொண்டு வருகிறேன்.

இந்த சந்திப்பின் போக்குவரத்து முறைகள் மற்றும் பாதுகாப்பு தேவைகளை உன்னிப்பாகக் கவனித்ததால், அண்டர் பாஸ் கட்டுமானம் தேவையில்லை என்று நான் நம்புகிறேன். மேலும், காவல்கிணறு சந்திப்பு Km 220/000 இல் முன் மொழியப்பட்ட அண்டர் பாஸ் இடத்திலிருந்து வெறும் 300 மீட்டர் தொலைவில் ரயில்வேபாலம் அணுகு முறை சாலை அமைந்துள்ளது. இயற்கை நிலதோற்றும் மற்றும் சேவை சாலையுடன் கூடிய நன்கு வடிவமைக்கப்பட்ட ரவுண்டானா அமைப்பதன் மூலம் தற்போதைய போக்குவரத்து நிலைமைகளை திறம்பட நிர்வகிக்க முடியும். இது விபத்துகளைத் தடுப்பது மட்டுமல்லாமல் திட்டத்தின் செலவையும் கணிசமாகக் குறைக்கும்.



முன்மொழியப்பட்ட அண்டர்பாஸுக்கு சுமார் ரூ.80 கோடி செலவாகும் என்றும், அதன் கட்டுமானப்பணிகள் முடிவடைய குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் ஆகும் என்றும் அறியப்படுகிறது. அண்டர்பாஸுக்குப் பதிலாக அதே இடத்தில் சர்வீஸ் சாலையுடன் கூடிய ரவுண்டானா அமைக்கப் பட்டால், செலவினம் குறிப்பிடத்தக்க அளவில் குறைவாக இருக்கும் மற்றும் ரவுண்டானா வேலைமுடிவதற்குத் தேவைப்படும் காலஅளவு கணிசமாகக்குறைவாக இருக்கும். காவல்கிணறு சந்திப்பில் சாலைப்பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து மேலாண்மையைப் பராமரிக்கும் அதே வேளையில், வளங்களை திறம்பட பயன்படுத்துவதை இந்த ஏற்பாடு உறுதி செய்யும்.

ரவுண்டானா அல்லது சந்திப்பு மேம்பாடு போன்ற அதிக செலவு குறைந்த தீர்வைத் தேர்ந்தெடுப்பதன்மூலம், இந்தத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியானது தேவைப்படும் பிற முக்கியமான பகுதிகளுக்கு மறு ஒதுக்கீடு செய்யப்படலாம். திருநெல்வேலியில் உள்ள தெற்குவள்ளியூர் சந்திப்பு கி.மீ 208/900 இல் NH44 இன் திருநெல்வேலி முதல் கன்னியாகுமரி வரையிலான நான்கு வழிச்சாலையில் அண்டர் பாஸ் அமைப்பதற்கு இந்த நிதி மிகவும் திறம்பட பயன்படுத்தப் படலாம், இந்த இடத்தில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படும் கரும்புள்ளியாகும். இந்த சந்திப்பு நான்குசாலைகள் சந்திக்கும் இடமாகும். மேற்குப் பக்கத்தை நோக்கிய சாலை வடலிவிலை, விஸ்வசாபுரம், ராஜலிங்கபுரம், ரோஸ்மியாபுரம் போன்ற கிராமங்களுக்கு செல்கிறது. மேலும், கிழக்குப் பகுதியை நோக்கிய சாலை தெற்கு வள்ளியூர், அழகப்பபுரம், மகிழ்ச்சிபுரம் போன்றகிராமங்களுக்கு செல்கிறது. இந்த சந்திப்பு ஒரு வளைவில் அமைந்துள்ளது, அங்கு தொடர்ச்சியான விபத்துக்கள் ஏற்படுகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் 25 விபத்துக்களும், அதில் 4 இறப்புகளும் நிகழ்ந்துள்ளன.

காவல்கிணறு சந்திப்பு மற்றும் தெற்குவள்ளியூர் சந்திப்பு ஆகிய இரண்டும் எனது ராதாபுரம் தொகுதியின் கீழ் வருவதால், மேற்கண்ட சந்திப்புகளுக்கு சிறந்த தேவையை வகுக்கும் வகையில் மேற்கண்ட தகவல்களை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

காவல்கிணறு சந்திப்பு கி.மீ 220/000 இல் அண்டர் பாஸின் முன்மொழிவைத் தொடங்குவதற்கு முன் இந்த மாற்று திட்டத்தை பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். காவல்கிணறு சந்திப்பில் தற்போதைய முன்மொழிவை அங்கீகரிப்பதற்கு முன்னர் எழுப்பப்பட்ட தகவல்களை தாங்கள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று நான் நம்புகிறேன்.

இந்த விஷயத்தில் தங்கள் ஒதுக்கிய நேரம் மற்றும் கவனத்திற்குநன்றி. நேர்மறையான பதிலை நான் எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், ஒன்றிய அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; காலியாக இருந்த நாற்காலியில் அமர்ந்து ராமாயண நாடகம் பார்த்ததற்காக, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ‘சந்த்’ என்பவரைத் தாக்கி அவமானப் படுத்தியிருக்கிறார்களே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; பா.ஜ.க. ஆளும் உத்தரப் பிரதேசத்தில்தான், சாதி ரீதியாகப் பிரிவினைப்படுத்தும் கடும் கண்டனத்திற்குரிய இந்தச் சம்பவம் கடந்த ஞாயிறன்று நடந்திருக்கிறது.**

**அவமானம் தாங்காமல் தூக்குப் போட்டுக் கொண்டு சந்த் தற்கொலை செய்துகொண்டார் என்றும் செய்தி வந்துள்ளது.**

**இப்படி ஒரு சம்பவம்தானா, மதம் - சாதி ரீதியாகப் பிளவுபடுத்தி, ஓராயிரம் சம்பவங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன !**

**இந்த லட்சணத்தில்தான், பிரிவினை - பிரச்சினை - சதி என்றெல்லாம், எதிர்க்கட்சிகளைப் பற்றி ஆர்.எஸ்.எஸ். தலைவர் பேசியிருக்கிறார்.**

**“ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்; உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்!”**


